## 2.21 ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சி) மற்றும் (தணிக்கை) அலுவலகங்களில் பதவிகள் வரையறை

ஊரக வளர்ச்சி (இ5) துறை

அரசாணை (நிலை) எண்.123 நாள் : 8.6.1998

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.180, ஊரக வளர்ச்சித் துறை நாள் 9.6.97
2. அரசாணை (நிலை) எண்.244, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 1.8.97
3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நேர்முக கடித எண்.70774/97, நாள் 24.9.97
4. அரசாணை (நிலை) எண்.122, ஊரக வளர்ச்சித் துறை நாள் 8.6.98.

**ஆணை**

மூன்று அடுக்கு ஊராட்சி நிர்வாக முறை ஏற்படுத்தியதின் விளைவாக, கோட்டம் மற்றும் மாவட்ட அளவில் பணியாற்றி வரும் ஊரக வளர்ச்சித் துறை நிர்வாக அமைப்பில் மாறுதல்கள், படிக்கப்பட்டவை இரண்டில் கண்ட அரசாணை மூலம் ஏற்படுத்தப்பட்டன. அந்த அரசாணைப்படி, மாவட்ட தலைமையிடத்தில் அல்லது அதனருகில் இருந்த கோட்ட வளர்ச்சி அலுவலரது அலுவலகம் வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) அலுவலகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அந்த அலுவலகத்தில் கீழ்கண்டவாறு பணியமைப்பு இருக்க வேண்டும் என உத்திரவிடப்பட்டது :

| வரிசை எண் | பதவியின் வகைகள் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) | 1 |
| 2. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்) | 1 |
| 3. | விரிவாக்க அலுவலர் (கணக்குகள்) | 1 |
| 4. | உதவியாளர்கள் | 4 |
| 5. | இளநிலை உதவியாளர்கள் | 2 |
| 6. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 |
| 7. | தட்டச்சர் | 1 |
| 8. | ஓட்டுநர் | 1 |
| 9. | பதிவுரு எழுத்தர் | 1 |
| 10. | அலுவலக உதவியாளர்கள் | 3 |

ஏற்கனவே விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்) அல்லது துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் உள்ள கூடுதல் ஊராட்சிகள் அலுவலர் பதவி ஏதேனும் அலுவலகங்களில் இருந்திருந்தால், அப்பதவி, வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) அலுவலகங்களில் தொடர்ந்து இருக்கவும் அனுமதிக்கப்பட்டது.

2. மாவட்டங்களில் இருந்த இரண்டாவது கோட்ட வளர்ச்சி அலுவலர் பதவி, வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) என பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவரது அலுவலகத்தில் கீழ்கண்டவாறு பணியமைப்பு மாற்றிமைக்கப்பட்டது.

| வரிசை எண் | பதவியின் வகைகள் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) | 1 |
| 2. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 |
| 3. | உதவியாளர்கள் | 3 |
| 4. | இளநிலை உதவியாளர் | 1 |
| 5. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 |
| 6. | தட்டச்சர் | 1 |
| 7. | ஓட்டுநர் | 1 |
| 8. | அலுவலக உதவியாளர்கள் | 2 |

## 2. IMPORTANT G.Os

இந்த அலுவலகங்களில் ஏற்கனவே விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்) அல்லது கூடுதல் ஊராட்சிகள் அலுவலர் பதவி ஏதேனுமிருப்பின், அப்பதவிகள் வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) அலுவலகத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது நோக்கமாக இருந்தாலும், அது பற்றி அரசாணையில் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

**3.** இரண்டாவது வளர்ச்சி அலுவலர் பணியமைப்பில் மாற்றம் செய்ததின் விளைவாக ஏற்பட்ட மிகுதிப் பணியாளர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மற்றும் மாவட்ட அளவிலான ஊரக வளர்ச்சி பொறியியல் பிரிவுகளில் கீழ்கண்டவாறு பணியாற்ற உத்திரவிடப்பட்டது :

| வரிசை எண். | பதவியின் வகைகள் | பதவிகளின் எண்ணிக்கை | மாற்றம் செய்யப்படும் அலுவலகம் |
|---|---|---|---|
| 1. | உதவியாளர் | 1 | கோட்டப்பொறியாளர் தலைமையில் உள்ள மாவட்ட அளவிலான ஊரக வளர்ச்சி பொறியியல் பிரிவு |
| 2. | இளநிலை உதவியாளர் | 1 | |
| 3. | அலுவலக உதவியாளர் | 1 | |
| 4. | விரிவாக்க அலுவலர் (கணக்குகள்) | 1 | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை |
| 5. | பதிவுரு எழுத்தர் | 1 | ஏற்கனவே பதிவுரு எழுத்தர் இல்லாத மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு |

**4.** ஏற்கனவே மூன்றாவது கோட்ட வளர்ச்சி அலுவலகம் அமைந்திருந்த 11 மாவட்டங்களான கடலூர், விழுப்புரம், வேலூர், சேலம், தர்மபுரி, ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பணியாற்றும் அனைத்து மூன்றாவது கோட்ட வளர்ச்சி அலுவலகப் பணியாளர்களும் அந்தந்த மாவட்ட ஊராட்சிகளின் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட உத்திரவிடப்பட்டது. வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) மற்றும் வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) அலுவலகங்களின் பணியமைப்பில் ஏதேனும் காலியிடங்கள் ஏற்படுமாயின், மாவட்ட ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்யப்பட்ட பணியாளர்களைக் கொண்டு, அந்த காலியிடங்களை பூர்த்தி செய்ய வேண்டும் எனவும், அதனால் நிகழும் மாவட்ட ஊராட்சிகளின் காலியிடங்களை பூர்த்தி செய்யக் கூடாது எனவும் உத்திரவிடப்பட்டன. மாவட்ட ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்யப்பட்ட பணியிடங்களை, பின்னாட்களில் விடுவிக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

**5.** கரூர் மாவட்டத்தைபொறுத்தமட்டில், இரண்டாவது கோட்ட அலுவலகம் ஏதுமில்லை. எனவே, மேலே பத்தி இரண்டில் குறிப்பிட்டவாறு பணியமைப்பு கொண்ட வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) அலுவலகம் குளித்தலையில் ஏற்படுத்த ஆணையிடப்பட்டது. ஆனால், அதற்காக பணியிடங்கள் ஏதும் பார்வை இரண்டில் கண்ட அரசாணையில் தோற்றுவிக்கப்படவில்லை.

**6.** நீலகிரி மாவட்டத்தில், 27 ஊராட்சிகள் மட்டுமே உள்ளதால், இரண்டாவது கோட்ட அலுவலகம் இல்லை. எனவே வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) பணிகளையும் வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) மேற்கொள்ள வேண்டும் எனவும், அவருக்கு இப்பணியை நிர்வகிக்க கீழ்கண்ட கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டன.

| வரிசை எண் | பதவியின் வகைகள் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | விரிவாக்க அலுவலர் (கணக்குகள்) | 1 |
| 2. | உதவியாளர் | 1 |
| 3. | இளநிலை உதவியாளர் | 1 |
| 4. | பதிவுரு எழுத்தர் | 1 |
| 5. | அலுவலக உதவியாளர் | 1 |

7. ஊரக வளர்ச்சி இயக்குநர், படிக்கப்பட்டவை இரண்டில் கண்ட அரசாணைக்கு சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆராய்ந்தது. படிக்கப்பட்டவை நான்கில் கண்ட அரசாணையில் ஏனையவற்றுக்கிடையே, மாவட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி), வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) மற்றும் வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) ஆகியோர்களது பெயர்கள் முறையே மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி), ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) என மாற்றம் செய்யப்பட்டு ஆணைகளிடப்பட்டுள்ளன. அதனடிப்படையில், அரசு கீழ்வரும் ஆணைகளை பிறப்பிக்கின்றது.

8. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்கள் கீழ்கண்ட பணியிடங்களை கொண்டவாறு உள்ளதாக அமைக்க வேண்டும் என அரசு தற்போது ஆணையிடுகின்றது.

| வரிசை எண் | பதவியின் வகைகள் | ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(தணிக்கை) அலுவலகம் ஒவ்வொன்றிலும் இருக்க வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | 500 அல்லது அதற்கு குறைவான கிராம ஊராட்சிகளைக் கொண்ட மாவட்டம் @ | 500க்கு மேற்பட்டும் 1000க்குட்பட்ட கிராம ஊராட்சிகளைக் கொண்ட மாவட்டம் @@ | 1000க்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளைக் கொண்ட மாவட்டம் @@@ |
| 1. | ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)/ ஊரக வர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) (நீலகிரி மாவட்டம் தவிர) | 1 | 1 | 1 |
| 2. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 | 1 | 1 |
| 3. | விரிவாக்க அலுவலர் (கணக்குகள்) | 1 | 1 | 1 |
| 4. | உதவியாளர்கள் | 4 | 5 | 6 |
| 5. | இளநிலை உதவியாளர்கள் | 3 | 4 | 5 |
| 6. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 | 1 | 1 |
| 7. | தட்டச்சர் | 1 | 1 | 1 |
| 8. | ஓட்டுநர் | 1 | 1 | 1 |
| 9. | பதிவுரு எழுத்தர் | 1 | 1 | 1 |
| 10. | அலுவலக உதவியாளர்கள் | 2 | 2 | 2 |
| | மொத்தம் | 16 | 18 | 20 |

@ நீலகிரி, கன்னியாகுமரி, தேனி, கரூர், திண்டுக்கல், பெரம்பலூர், நாமக்கல், ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருவாரூர், மதுரை, சிவகங்கை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், விருதுநகர், மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.

@@ திருவள்ளூர், தர்மபுரி, தஞ்சாவூர், காஞ்சிபுரம், கடலூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள்.

@@@ விழுப்புரம் மாவட்டம்.

9. இதன் தொடர்பாக, ஏற்கனவே பிறப்பித்த அரசாணையை கீழ்கண்டவாறு நிர்வாக அமைப்பில் மாற்றங்கள் செய்ய தற்போது அரசு ஆணையிடுகிறது.

(i) இரண்டாவது கோட்ட அலுவலக பணியமைப்பில் ஏற்கனவே இருந்த அனைத்து நிர்வாகப் பதவிகளும், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும். கூடுதல் ஊராட்சிகள் அலுவலர் அல்லது

## 2. IMPORTANT G.Os

விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்) அல்லது இவ்விரண்டு பதவிகளும் ஏற்கனவே அமைந்திருந்தால், ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகங்களைப் போன்று அப்பணியிடங்கள் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களிலும் தொடர்ந்து இருக்க வேண்டும். மாவட்ட அளவிலான ஊரக வளர்ச்சி பொறியியல் பிரிவுகள் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு இந்த அலுவலகங்களிலிருந்து, மேலே பத்தி 3ல் குறிப்பிட்டவாறு, மாற்றம் செய்ய பிறப்பித்த உத்திரவு தற்போது ரத்து செய்யப்படுகிறது.

(ii) இதர உபரி பணியிடங்களான காவலர், மசால்சி போன்ற பணியிடங்கள் ஏதேனும் முதல் மற்றும் இரண்டாவது கோட்ட வளர்ச்சி அலுவலகத்தில் இருந்திருந்தால், அப்பணியிடங்கள் மாற்றியமைக்கும் அலுவலகத்திலும் தொடர்ந்து பணியாற்றவேண்டும்.

(iii) தற்போது ஆணையிடப்பட்ட பணியமைப்பை ஒட்டி, தேவைப்படும் பணியிடங்கள், ஏற்கனவே பிறப்பித்த அரசாணையை கீழ்கண்டவாறு மாற்றியமைப்பதின் மூலம் சரிகட்ட வேண்டும்.

(அ) கள்ளக்குறிச்சி, தாராபுரம், திருப்பூர் மற்றும் தென்காசியில் உள்ள மூன்றாவது கோட்ட அலுவலகங்களில் பணியாற்றிய பதிவுரு எழுத்தர் பதவி, அந்தந்த மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை)அலுவலகத்தில், ஏற்கனவே இது போன்ற பதவி இல்லாமையால், அவ்வலுவலகங்களுக்கு மாற்றம் செய்யப்பட வேண்டும். விருத்தாச்சலம் கோட்ட அலுவலகத்தில் இருந்த பதிவுரு எழுத்தர் பதவி அம்மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களில் ஏற்கனவே அதுபோன்ற பதவிகள் இருப்பதால், கடலூர் மாவட்ட ஊராட்சியின் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

(ஆ) கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, தாராபுரம் மற்றும் திருப்பூர் கோட்ட அலுவலகங்களில் இருந்த காவலர் பதவி ஏற்கனவே அதுபோன்ற பதவி இல்லாமையால், அந்தந்த மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களுக்கு மாற்றல் செய்யப்பட வேண்டும். பட்டுக்கோட்டை கோட்ட வளர்ச்சி அலுவலகத்தில் இருந்த காவலர் பதவி, ஏற்கனவே தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களில் அதுபோன்ற பதவிகள் இருப்பதால், தஞ்சாவூர் மாவட்ட ஊராட்சி அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும்.

(இ) கள்ளக்குறிச்சி கோட்ட வளர்ச்சி அலுவலகத்தில் இருந்த விரிவாக்க அலுவலர் (ஊராட்சிகள்) பதவி, விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்திற்கு, ஏற்கனவே, அது போன்ற பதவி ஒன்று இருந்தாலும், அம்மாவட்டத்தில் 1000க்கு மேற்பட்ட ஊராட்சிகள் இருப்பதால், மற்றொரு கூடுதல் பணியிடமாக மாற்றம் செய்யப்படவேண்டும். பட்டுக்கோட்டை கோட்ட வளர்ச்சி அலுவலகத்தில் உள்ள விரிவாக்க அலவலர் (ஊராட்சிகள்) பதவி, அதுபோன்ற பதவி இல்லாமையால், தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்படவேண்டும்.

(ஈ) மூன்றாவது கோட்ட வளர்ச்சி பணியமைப்பில் 11 மாவட்டங்களில் இருந்த ஒரு கோட்ட வளர்ச்சி அலுவலர், ஒரு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஒரு விரிவாக்க அலவலர் (கணக்குகள்) மற்றும் ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடங்கள் அந்தந்த மாவட்ட ஊராட்சிகளுக்கு மாற்றம் செய்யப்படவேண்டும்; அந்தந்த மாவட்ட ஊராட்சிகளில் அப்பதவிகள் தோற்றுவிக்கப்பட்டதாக கருதப்படவேண்டும்.

(உ) மூன்றாவது கோட்ட வளர்ச்சி பணியமைப்பில் 11 மாவட்டங்களில் இருந்த ஒரு தட்டச்சர் பணியிடமும், ஒரு ஓட்டுநர் பணியிடமும் மற்றும் வாகனம், அந்தந்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் உள்ள செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும். அரசு ஆணையை எதிர்ப்பார்த்து வாகனம் மற்றும் ஓட்டுநர் பதவியை செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) அவர்களுக்கு ஏற்கனவே மாற்றம் செய்து ஊரக வளர்ச்சி இயக்குநர் உத்திரவு பிறப்பித்துள்ளதை அரசு தற்போது பின்னேற்பு செய்கின்றது.

(ஊ) உதவியாளர், இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர் பணியிடங்களில் குறைவு ஏற்படுமாயின், மூன்றாவது கோட்ட வளர்ச்சி பணியமைப்பிலிருந்து பணிமாற்றம் செய்வது மூலம் இக்குறையை நிவர்த்தி செய்யலாம். ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களில் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களை காட்டிலும் மிகுதியாக ஏதேனும் உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்கள் இருக்குமாயின், அவைகளையும், மூன்றாவது கோட்ட வளர்ச்சி பணியமைப்பில் இயங்கி வந்த ஏதேனும் பணியிடம் தற்போது விடுபட்டுபோயிருப்பின் அவைகளையும் அந்தந்த மாவட்ட ஊராட்சிகளுக்கு மாற்றப்பட வேண்டும்.

(எ) ஏற்கனவே பிறப்பித்த அரசாணைப்படி, நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்திற்கு, ஒரு விரிவாக்க அலுவலர், ஒரு பதிவுரு எழுத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் பணியிடங்கள்

கூடுதலாக வழங்குவதற்கு பதிலாக, ஒரு உதவியாளர் மற்றும் இரண்டு இளநிலை உதவியாளர் பணியிடங்கள் மட்டும் இந்த அலுவலகத்திற்கு ஒன்றிய அளவிலான மிகுதி பணியிடங்களிலிருந்து பின்னர் வழங்கப்பட ஊரக வளர்ச்சி இயக்குநர் தகுந்த செயற்குறிப்பை அரசுக்கு அனுப்ப வேண்டும்.

(ஏ) கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகத்தை பொறுத்த மட்டில் எந்தப் பதவியையும் தனியே உருவாக்கத் தேவையில்லை. ஏற்கனவே திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊராட்சி அலுவலகத்திற்கு பணிமாற்றம் செய்த மிகுதிப் பணியாளர்கள் மற்றும் ஒன்றிய அளவிலான மிகுதிப் பணியாளர்கள் மூலம் இந்த அலுவலகத்திற்கான அனைத்து பணியிடங்களையும் நிரப்ப ஊரக வளர்ச்சி இயக்குநர் தகுந்த செயற்குறிப்பை அரசுக்கு அனுப்ப வேண்டும்.

இந்த அரசாணை நிதித்துறையின் 34363/ஆர்.டி/98 எண்ணும் 18.5.98 நாளும் இட்ட அலுவல் சார்பற்ற குறிப்பில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்